ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1971/13 - 2016 ජූනි මස 15 වැනි බදාදා - 2016.06.15

*1971/13 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவினது (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளின் பிரகாரம் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்**

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவினது (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 67 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களைக் கொண்டு, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை முன்வைத்த சிபாரிசின் அடிப்படையில், மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சர் ரன்ஜித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், மின்னுபகரணங்களின்* (Double capped Tubular Fluorescent Lamps and Fluorescent Lamp Ballasts) *சக்தி வினைத்திறன் நியமங்கள் தொடர்பான கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை ஆக்குமாறு இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.*

*ரன்ஜித் சியம்பலாபிட்டிய,*
*மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சர்.*

*2016, மே 31.*

*பின்னிணைப்பு* A

*ச.வ.பீ 8/2007* (II)

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம்*

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 67 ஆம் பிரிவின் கீழ் மின் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*ரன்ஜித் சியம்பலாபிட்டிய,*
*மின்வலு மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2016, மே 31.*

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உபகரணங்களின் வலு நிறைவேற்ற நியமங்கள் (இரட்டை மூடிக் குழாய்வடிவ ஒளிரும் விளக்குகள் மற்றும் ஒளிரும் விளக்குகளின் உறுதிச் சமநிலை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும் இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளை, இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த பதிவிலுள்ள இலங்கை நியமத்துடன் (SLS) அது ஒத்திசைவாகவிருந்தாலன்றி இலங்கைக்குள் இறக்குமதி செய்தலோ அல்லது இலங்கையில் உற்பத்தி செய்தலோ ஆகாது.

3. இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொருளின் ஒவ்வொரு இறக்குமதியாளரும் அல்லது உற்பத்தியாளரும் -

(அ) இதற்கான அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிலில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை நியமங்களுடன் இணங்கியொழுகின்ற வலு சுட்டுத்துண்டொன்றை, பொருளுக்கு அல்லது உறைக்கு அல்லது மூடு உறைக்கு அல்லது பொருள் உள்ளடங்கிய பெட்டிக்கு ஒட்டியிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த பதிவிலுள்ள நியமங்களுடன் ஒத்திசைவாக உள்ளதென்று உறுதிப்படுத்துகின்ற இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை அதிகார சபை தேவைப்படுத்தும் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாயினுஞ்சரி இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதும் 3 (ஆ) என்னும் ஒழுங்குவிதியினால் விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் ஒத்திசைவற்ற முறையில் வலு சுட்டுத் துண்டொன்று பொருளுக்கு அல்லது உறைக்கு அல்லது மூடு உறைக்கு அல்லது பொருள் அடங்கியுள்ள பெட்டிக்கு ஒட்டப்பட்டுள்ளதுமான அப்பொருளை, ஆளெவரும் களஞ்சியப்படுத்தலோ, வெளிக்காட்டுதலோ, மொத்த விற்பனையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்தலோ, விற்பனை செய்ய முனைதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

5. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம் எனப் பொருள்படும் ;

"அதிகார சபை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை எனப் பொருள்படும் ; அத்துடன்

"இலங்கை கட்டளைகள் நிறுவனம்" என்பது, 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனம் எனப் பொருள்படும்.

## அட்டவணை

(ஒழுங்குவிதிகள் 2, 3 மற்றும் 4)

| இல. | நிரல் I<br>பொருள் | நிரல் II<br>SLS இல. |
|---|---|---|
| 1. | குழாய் வடிவ ஒளிரும் விளக்கு | 1625:2012 |
| 2. | 18/20W விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்ட காந்த வகையிலான ஒளிரும் விளக்குகளின் உறுதிச் சமநிலை | 1200 : 2012 |
| 3. | 36/40W விளக்குகளுக்கு பயன்படுத்தப்பட்ட காந்த வகையிலான ஒளிரும் விளக்குகளின் உறுதிச் சமநிலை | 1200 : 2012 |
| 4. | இலத்திரனியல் வகையினலான ஒளிரும் விளக்குகளின் உறுதிச் சமநிலை | 1200: 2012 |

7 - 96